26.02.2026.

OS.317/2024

PW1- தவசிமுத்து– த/பெ. தவசிமணி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.02.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. தபசில் சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 12 சென்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. என் தகப்பனார் 1963ம் ஆண்டு கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் ஏன் அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் வரும்போது கொண்டுவருகிறேன்.

4. தபசில் சொத்திற்கு என் பெயரிலோ, என் தகப்பனார் பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரியல்ல பட்டா உள்ளது. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் என் பெயரில் என் தகப்பனார் பெயரில் பட்டா இருந்திருந்தால் அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. சொத்திற்கு நான் தீர்வை செலுத்தியதற்கான ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கொண்டு வருகிறேன்.

6. தபசில் சொத்தில் நான் என்ன நிலையில் அனுபவம் செய்கிறேன் என்றால் நெற்பயிர் வைத்து அனுபவம் செய்கிறேன்.

7. தபசில் சொத்தின் 10(1) அடங்கல் மற்றும் பசலி பதிவேடை தாக்கல் செய்தால் தபசில் சொத்தின் அனுபவம் யார் வசம் உள்ளது என தெரியவரும் என்றால் சரிதான்.

8. பசலி பதிவேடு யார் பெயரில் உள்ளது என்றால் என் தகப்பனார் பெயரில் உள்ளது. அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் உள்ளேன்.

9. என் தகப்பனார் காலமான பின் எனக்கும், என் சகோதர, சகோதரிகளுக்குள் பாகத்தின் படி தபசில் சொத்து என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

10. எப்போது பாகம் ஏற்பட்டது என்றால் தற்போது சாட்சி என் அப்பா உயிருடன் உள்ள போதோ பாகம் ஏற்பட்டதாக பதில் அளித்தார்.

11. நான் பிராதில் என் அப்பா இறந்த பின் பாகம் ஏற்பட்டதாக குறிப்பிட்டிருந்தால் தவறு என்றால் தற்போது சாட்சி என் அப்பா இருக்கும் போது நான் அனுபவம் செய்ததாக பதில் அளிக்கிறார்.

12. 1 முதல் 3 பிரதிவாதிகள் கடந்த 25.06.2012ம் தேதி 6ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய 11 சென்ட் கிரையம் விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 1.1/2 வருடத்திற்கு முன்பு தான் எனக்குத் தெரியும்.

13. 6ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பின் அவர் பெயரில் தனி பட்டா ஏற்பட்டு அவர் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

14. 1 முதல் 3 பிரதிவாதிகள் 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 12 வருடங்கள் கழித்து நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

15. 4,5 பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். 4,5 பிரதிவாதிகளின் தகப்பனார் நடராஜன் நாடாரை தெரியுமா என்றால் தெரியும்.

16. நடராஜன் நாடாருக்கு சேம்புக்கனி, ராஜேந்திரன், கணேசன் ஆகிய 3 பேர் வாரிசுகள் என்றால் சரிதான்.

17. நடராஜன் நாடாரின் மகன் கணேசன் இறந்துவிட்டார் என்றால் சரிதான்

18. கணேசனின் மனைவி லதா 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். கணேசனின் மகன்கள் தான் 2,3 பிரதிவாதிகள் என்றால் சரிதான்.

19. 1 முதல் 5 பிரதிவாதிகள் நடராஜனின் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

20. தபசில் சொத்து ஆதியில் நடராஜன் நாடாருக்கு பாத்தியப்பட்டு அவரின் வாரிசுகள் பாகம் பிரிக்கப்பட்டு அந்த பாகம் கணேசன் தரப்பிற்கு ஒதுக்கப்பட்டு கணேசனின் வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகள் கடந்த 25.06.2012ம் தேதி 6ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 6ம் பிரதிவாதி பிரேம்குமார் பெயரில் தனி பட்டா ஏற்பட்டு 6ம் பிரதிவாதி அனுபவம் செய்து

வருகிறார் என்றும் எனக்கு தபசில் எந்த உரிமையும் இல்லாததால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி